**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.48/2013**

**இ.ம.எண்.5/2026**

1) தங்கமணி

2) ரோகிணி

3) குருமூர்த்தி

4) பிச்சையம்மாள் **...மனுதாரர்கள்/வாதிகள்**

**/எதிர்/**

1) வன்னிமுத்து

2) சுசீலா

3) பெரியசாமி **..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 17.02.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16, விதி 1 மற்றும் 2 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால், மனுவில் கண்ட சாட்சிகளுக்கு இந்நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பி, மேற்படி

அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்ய, இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்:</u>**

2) மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கின் வாதிகள் ஆவார்கள். மேற்படி அசல் வழக்கானது, பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு வாதிகள் தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1ன் ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சாட்சிகளை விசாரணை செய்ய வாதிகள் தரப்பில், சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்து, அவர்களை விசாரணை செய்வது அவசியமாய் உள்ளத. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. அது மன்னிக்கக்கூடியது ஆகும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படாது. மாறாக, மனுதாரர்களுக்கே இம்மனுவை அனுமதிக்காவிட்டால் அதிகப்படியான கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களால் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

3) மனுதாரர்களால் மனுவில் குறிப்பிட்டு கூறியுள்ள விவரங்களை மனுதாரர்களே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தல்ல. அசல் வழக்கு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்பது உண்மை. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சிகளை, வாதிகள் தரப்பு சாட்சிகளாக விசாரிக்க

அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

4) அசல் வழக்கில் வா.சா.1யை, கடந்த 10.07.2025 அன்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, பின்பு வா.சா.2யை கடந்த 01.08.2025 அன்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, மேலும் வா.சா.3யை கடந்த 02.09.2025ம் தேதி குறுக்கு விசாரணை செய்த பின்னிட்டு, வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக பல வாய்தாக்கள் வழங்கப்பட்டு, கடந்த 20.09.2025ம் தேதி வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. பின்பு, பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமும் முடிக்கப்பட்டு, அசல் வழக்கு வாதுரைக்காக போடப்பட்ட சமயத்தில் எவ்விதமான முகாந்திரமும் இல்லாமல் வாதிகள் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு அசல் வழக்கில் நல்ல கட்சி இல்லை என்பது மனுதாரர்களுக்கு தெரியும். எதிர்மனுதாரர்களுக்கு தொடர் இடைஞ்சல் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுபடி, எந்த பரிகாரமும் மனுதாரர்களுக்கு கிடைக்காது என்பதை தெரிந்து கொண்டு வழக்கு நடவடிக்கைகளை காலதாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்களின் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

5) மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

6) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**தீர்வு:**

7) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி மேற்படி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறியுள்ளது போல், மேற்படி அசல் வழக்கில் வாதிகள் தரப்பு வழக்கு விசாரணையானது, கடந்த 20.09.2025 அன்றே முடிக்கப்பட்டு, பின்பு பிரதிவாதிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, மேற்படி அசல் வழக்கானது இரு தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில், இம்மனுவில் கண்ட சாட்சிகளை, அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சிகளாக விசாரிக்க அனுமதி வேண்டி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர்கள் தரப்பில், மேற்படி அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1ல் கண்ட சாட்சிகளை விசாரணை செய்யவும், அதன்மூலம் வா.சா.ஆ.1யை நிரூபணம் செய்யவும், அசல் வழக்கில் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பி வாதிகள் தரப்பில் விசாரணை செய்ய வேண்டியது அவசியமும், நியாயமுமாய் உள்ளது என்றும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் எதிர்மனுதாரர்களைவிட மனுதாரர்களுக்கே அதிகப்படியான கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் கூறி வாதியிடப்பட்டது. மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் கூறியுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என்றும், கடந்த 20.09.2025 அன்றே வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது என்றும், மேற்படி அசல் வழக்கு வாதுரைக்காக போடப்பட்ட சமயத்தில் எவ்விதமான முகாந்திரமும் இல்லாமல், இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்களுக்கு அசல்

வழக்கில் நல்ல கட்சி இல்லை என்றும், எனவே, மனுதாரர்களுக்கு இம்மனுவில் கண்ட பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் இம்மனுவை கால தாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**9)** இரு தரப்பு வாதங்களையும் கவனமுடன் பரிசீலனை செய்ததிலும், வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததிலும், மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த 02.07.2019 அன்று வாதி தரப்பு சாட்சியான வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகள் அளித்தும், வருகை தராத காரணத்தினால் தோன்றாத் தரப்பினர்களாக இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு, கடந்த 05.07.2019 அன்று மேற்படி அசல் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பானது வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. மேலும், அதனைத் தொடர்ந்து, எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நீக்கரவு செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனுவானது அனுமதிக்கப்பட்டு மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பானது, கடந்த 26.03.2025 அன்று இந்நீதிமன்றத்தால் நீக்கரவு செய்யப்பட்டு, பின்பு வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு, மேற்படி அசல் வழக்கானது தொடரப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**10)** இவ்வாறு இருக்கையில், மேற்படி வழக்கு விசாரணையின் போது, வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சாட்சிகளை விசாரணை செய்ய வாதிகள் தரப்பில் எவ்வித காலதாமதமும் ஏற்படவில்லை என்றும், மேற்படி தவறானது வேண்டுமென்றே ஏற்பட்டதாக இல்லை என்றும், வாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ள காரணமானது நீதியின் நலன் கருதி ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளதாகவும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. வா.சா.ஆ.1 ஆவணமானது, கடந்த

10.08.1996ம் தேதி பதிவு செய்யப்படாத பஞ்சாயத்து முச்சலிக்கா என்பது தெரிகிறது. மேலும், மேற்படி ஆவணங்களில் மனுவில் கண்ட நபர்களான ராஜப்பன் மற்றும் மாணிக்கம் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்பது தெரிகிறது. மேற்படி ஆவணத்தை நிரூபணம் செய்யும் பொருட்டு அதில் கண்ட சாட்சிகளை அழைத்து மேற்படி அசல் வழக்கில், வாதிகள் தரப்பில் விசாரணை செய்ய வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**11)** இந்நிலையில், அசல் வழக்கில் இரு தரப்பினர்களும் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் அவரவர் கட்சியை நிரூபணம் செய்ய போதுமான வாய்ப்புகள் அளித்த பின்னிட்டே இந்நீதிமன்றத்தால் இரு தரப்பினர்களுக்கும் நீதி பரிபாலனம் வழங்கமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், வாதிகள் தரப்பில் எவ்வித அதிகப்படியான காலதாமதமும் ஏற்படவில்லை என்பதை அறிய முடிகின்றது. எனவே, வாதிகள் தரப்பில் இம்மனுவில் கூறியுள்ள காரணமானது, இம்மனுவை அனுமதிக்க போதுமானதாகவும், ஏற்றுக்கொள்ளும்படியாகவும் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதால், எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. மனுவில் கண்ட சாட்சிகள், மேற்படி அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்ய சாட்சிகளுக்கு அழைப்பாணை

அனுப்ப இதன்மூலம் உத்தரவிடப்படுகின்றது. மனுதாரர்கள், மேற்படி அழைப்பாணை சார்வு செய்ய இந்த உத்தரவு பிறப்பித்த மூன்று தினங்களுக்குள் படி கட்டவும், மேலும் மனுவில் கண்ட சாட்சிகளை அழைத்து விசாரணை செய்வதிலும் எவ்வித காலதாமதமும் ஏற்படுத்தாமல் இரு தரப்பினர்களும் விசாரணை செய்து, மேற்படி அசல் வழக்கை விரைந்து முடிக்க இதன்மூலம் உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.02.23 17:37:56 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.02.23 17:38:00 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**